07.01.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No.205 /2018**

அ.சா.**4**

பெயர்.**லோகேஷ்குமார்**

சாட்சி இன்று 07.01.2023 மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் ஒரு குற்றவாளியாக சேர்த்தார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கு பிறகு என்னையும் தற்காலிக பணிநீக்கம் செய்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக டிஎஸ்பி என் மீது துறை விசாரணை நடத்தினார் என்றால் சரியல்ல. துரை என்பவர் தாக்கப்பட்ட வழக்கு விசாரணை செய்தார். ஜெயவேல் என்பவர் இறந்த தினம் தான் துரை என்பவர் தாக்கப்பட்டார். 6.5.2014ந் தேதி மாலை 5மணி முதல் 7.5.2014ந்தேதி இரவு வரை நான் நிலைய பணியில் இருந்தேன் என்பதற்கு வேறு ஆதாரம் உண்டா என்றால் இல்லை. என்னை புலன் விசாரணை செய்த அதிகாரி எனது செல்போனை செக்பன்னி பார்த்தாரா என்றால் எனது செல்போனை வாங்கவில்லை. கால ் ரிஜிஸ்டர் எடுத்துப்பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. துரை என்பவர் தாக்கப்பட்ட வழக்கில் தான் குற்ற சாட்டு குறிப்பாணை எனக்கு கொடுத்தார்கள். அதற்கு நான் எழுத்துப்பூர்வமான பதில் கொடுத்தேன். அந்த துறை விசாரணை இன்னும் நிலுவையில் உள்ளது. 8.5.2014 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட நான் மீண்டும் 2017 ஜனவரியில் பணியில் சேர்ந்தேன். இடைப்பட்ட காலத்தில் எந்த காவல் ஆய்வாளராவது என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரித்தார்களா என்றால் சிபிசிஜடி என்னை விசாரித்தார்கள். எனக்கு மீண்டும் வேலை கொடுப்பதாக அவர்கள் உறுதியளித்ததால் தான் நான் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை முதலில் விழுப்புரம் சிபிசிஜடி போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது 1 முதல் 3 வரை

எதிரிகளுக்கு எதிராக மட்டுமே குற்றச்சாட்டு இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் விஜய் என்னை விசாரித்தார் என்றால் சரிதான். அவர் நீதித்துறை நடுவர் மூலம் என்னிடம் வாக்குமூலம் பெற நடவடிக்கை எடுத்தார் என்றால் சரியல்ல. என்னிடம் நீதித்துறை நடுவர் கு.வி.மு.ச .பிரிவு 164 படி வாக்குமூலம் பெறவில்லை. காவல்நிலையம் வந்து நீதித்துறை நடுவர் பிரேத விசாரணை நடத்தியபோது என்னை விசாரித்தார். அந்த விசாரணையில் ஜெயவேலை பிளாட்பாரத்தில் அழைத்து செல்லும்போது பொதுமக்கள் அடித்தார்கள் என்றும், ஜெயவேல் தண்டவாளத்தில் கீழே விழுந்தார் என்றும், ஜெயவேலுக்கு அடிப்பட்டது என்றும் ' நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3வது எதிரியான காவல் ஆய்வாளர் அவ்வாறு சொல்லவேண்டும் என்று என்னிடம் சொல்லிருந்ததால் அவ்வாறு நீதித்துறை நடுவரிடம் சொன்னேன். அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை. துரை என்பவர் தாக்கப்பட்ட வழக்கில் துறை விசாரணையில் மதுரை ரயில்வே டிஎஸ்பி என்னை விசாரித்தபோது நானும் 1வது எதிரி திருகுமரன் ஜெயவேல் மீது காலால் மிதித்ததாக குற்றச்சாட்டு எழுப்பியபோது நான் அதனை மறுத்து அன்று காவல் நிலையம் வரவில்லை என்று சொன்னேன் என்றால் சரியல்ல. அப்படி எதுவும் நான் சொல்லவில்லை. நான் அவ்வாறு சொல்லிவிட்டு தற்சமயம் உண்மையை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் தவறு செய்யும் போது அதனை வெளியில் சொன்னால் பிரச்சனை ஏற்படும் என்று நாங்கள் கருதுவது இயல்பு என்றால் சரியல்ல. முதலில் நீதித்துறை நடுவரியிடம் 3வது எதிரி இன்ஸ்பெக்டர் பொய் சொல்ல சொன்னார். கடைசியாக இவ்வழக்கில் என்னை வேலூர் சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் என்னை விசாரீத்தார். நான் அழைத்ததின்பேரில் தான் பொதுமக்கள் தாக்கி ஜெயவேல் காயம் அடைந்ததாக சாட்சிகள் சிவக்குமார், ராபர்ட் ஆகியோரிடம் சொல்ல சொன்னேன் என்றும் நீதித்துறை நடுவரிடம் சாட்சிகள் அவ்வாறு சொன்னார்கள் என்றும் 3வது எதிரி இன்ஸ்பெக்டர் அவ்வாறு சாட்சிகளிடம் சொல்ல சொன்னதால் நான் அவ்வாறு சாட்சிகளை சொல்ல செய்தேன் என்றும் சிபிசிஐடி டிஎஸ்பி விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். நான் தற்காலிக பணீநீக்கத்தில் இருந்தபோது எனக்கு மீண்டும் பணி வழங்க கோரி மேல் அதிகாரிகளிடம் கோரிக்கை மனு கொடுத்தேனா

என்றால் இல்லை. இவ்வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் நான் குற்றவாளி அல்ல என்றும் பணியில் சேர்க்க வேண்டும் என்று மனு கொடுத்தேன். எனக்கு மனு கொடுத்த தேதி நினைவில்லை. ரயில்வே எஸ்பி மற்றும் டிஐஜிக்கு மனு கொடுத்தேன். அவர்கள் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. தற்காலிக பணிநீக்கத்தில் இருந்தபோது என் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில் கொடுத்தேன் என்றால் எனக்கு எந்தவித குற்றச்சாட்டு குறிப்பாணையும் கொடுக்கவில்லை. அரசு தரப்பிற்கு சாதமாக சாட்சியம் அளிக்கவேண்டும் என்ற அறிவுறுத்தலின் அடிப்படையில் எனக்கு வேலை திரும்ப கொடுத்தார்கள் என்றும் 4,5எதிரிகளுக்கு எதிராக நான் சொன்ன சங்கதிகள் பொய் என்றும் சொன்னால் சரிதான். 6.5.2014ந் தேதி காவல்நிலையத்தில் எழுத்தராக இருந்தவர் புருஷோத்தமன். காவல்நிலைய முதல்தகவல் அறிக்கை மற்றும் ரிமாண்ட் ரிப்போர்ட் ஆகியவற்றை எழுதுபவர் நிலைய எழுத்தர் என்றால் அது தவறு. 4வது எதிரி ராஜீவ்காந்திதான் எழுதினார். ராஜீவ்காந்தி கணினி பிரிவில் பணியாற்றினார் என்றால் சரிதான். புருஷோத்தமன் அன்று ஆவணங்கள் அனைத்தையும் எழுதினார் என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரைம் போலீஸ் என்பதால், குற்றவாளியை கைது செய்தால் ரிமாண்ட் செய்யும் வரை கைதியை பாதுகாப்பது எனது கடமை என்றால் சரியல்ல. 2வது எதிரிதான் ஜெயவேலை கைது செய்தார். சேடோவ் போட்ட போலீசார் தான் கைதியை பாதுகாக்க கடமைப்பட்டவர். அன்று நானும் பத்மநாபனும் கிரைம் போலீஸ் என்ற முறையில் பணியில் இருந்தோம் என்றால் பத்மநாபன் லீவில் சென்றிருந்தார். நான் கிரைம் டியூட்டி பார்த்தேன். 1 முதல் 3 எதிரிகள் ஜெயவேலை அடித்ததை பார்த்தும் ஏன் உயர் அதிகாரிகளுக்கு உடனே தகவல் அளிக்கவில்லை என்றால் அடித்ததே இன்ஸ்பெக்டரான மேல் அதிகாரி என்பதால் நான் வெளியில் சொல்ல முடியாது. இன்ஸ்பெக்டரை தாண்டி நான் டிஎஸ்பி உள்ளீட்ட உயர் அதிகாரிகளை தொடர்புக்கொள்ள முடியாது. அதற்கு நேரமும் இல்லை. 7ந்தேதி காலையில் சித்ரா என்பவர் காவல்நிலையத்தில் பாரா டியூட்டியில் இருந்தார். 7ந்தேதி சித்ரா பாரா டியூட்டியில் இருந்தார் என்பது பாரா புத்தகத்தில் எழுதி இருந்ததால் மேல் அதிகாரிகளின் 'விசாரணையின் போது

அவர் பயந்து உண்மையை சொல்லிவிடுவார் என்பதால் பாரா புத்தகத்தில் உள்ள சம்மந்தப்பட்ட பக்கத்தை கிழித்துவிட்ட 7ம் தேதி காலையில் ஸ்ரீநாத் பாரா டியூட்டி பார்த்தாக ராஜீவ்காந்தி பாரா புத்தகத்தை எழுதி ஸ்ரீநாத் வசம் கையொப்பம் பெற்றார். 3ம்எதிரி இன்ஸ்பெக்டர் சொன்னதால் தான் ஸ்ரீநாத் மற்றும் ராஜீவ்காந்தி அவ்வாறு செய்தார்கள். இன்ஸ்பெக்டர் சொல்லி செயல்பட்டதாக சொல்லும் என்னை பணியமர்த்திவிட்டார்கள் என்றும், அவர்களை குற்றவாளியாக்கிவிட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. ராஜீவ்காந்தி நான் சொல்வதுபோல பாரா புத்தகத்தை எழுதவில்லை என்றும் ஸ்ரீநாத் கையொப்பம் போடவில்லை என்றும் அவர்களை கேட்காமலேயே அந்த ஆவணங்கள் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஜெயவேல் தாக்கப்படும் போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். ராஜீவ்காந்தி மற்றும் ஸ்ரீநாத் பாரா புத்தகத்தை எழுதவில்லை என்றும் அவ்வாறு ஜோடித்து இருப்பது தெரிந்தும் அவர்கள் இருவரும் மேல் அதிகாரிகளிடம் தகராறு செய்ததால் தான் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேல் அதிகாரிகள் கேட்டுகொண்டதால் நான் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்காவிட்டால் வேலை காப்பாற்ற முடியாது என்பால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 2011ல் தான் நான் விழுப்புரம் ரயில்வே காவல்நிலையத்தில் பணியில் சேர்ந்தேன். அங்கு முதல் 1 வருடம் பொது பணி செய்தேன். அதன்பிறகு கிரைம் டியூட்டி போட்டார்கள். 3வது எதிரி வாசுதேவன் கடந்த 2014ல் தான் ரயில் காவல்நிலையத்தில் பணியில் சேர்ந்தார் என்றால் 2013 அல்லது 2014ல் சேர்ந்திருக்கலாம் எனக்கு நினைவில்லை. 3வது எதிரி இன்ஸ்பெக்டராக பணியில் சேர்வதற்கு முன்பு சென்னையை சேர்ந்த செந்தில் என்பவர் இன்ஸ்பெக்டராக இருந்தார். சாட்சிகள் அ.சா.1 சிவக்குமார் மற்றும் சாட்சிகள் அய்யப்பன், ராபர்ட் ஆகியோர் எனது நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். ஜெயவேல் எனக்கு எவ்வுளவு காலம் பழக்கம் என்றால் இவ்வழக்கிற்கு சம்பவத்திற்கு முன்பு 3 ஆண்டுகளாக தெரியும். ரயில்வே பிளாட்பாரத்தில்

புத்தகங்கள் விற்பார் அதனால் தெரியும். அந்நிய நபர்கள் ரயில்வே பிளாட்பாரம் டிக்கெட் வாங்க வேண்டும் என்றால் சரிதான். கடை நடத்துபவர்கள், உரிமம் இல்லாமல் பிளாட் பாரத்தில் வரமுடியாது என்று சொன்னால் சரிதான். 2011ல் ரயில்வே பிளாட்பாரம் சீரமைக்கும்போது ரயில்வே டிக்கெட் கவுண்டர் அருகில் கிக்கிங்பாதம் புத்தக கடையை இடம் மாற்றிவிட்டார்கள் என்றால் சரிதான். ஜெயவேல் யாருடைய அனுமதி இல்லாமல் தான் ஒரு பையில் புத்தகத்தை வைத்து விற்றுவந்தார் என்றால் சரிதான். ஜெயவேல் இறப்பு தொடர்பாக 7.5.2014ந்தேதி என்னை தற்காலிக பணிநீக்கம் செய்தார்கள் என்றால் சரிதான். திருச்சி ரயில்வே இருப்பு பாதை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் 3.7.2015ல் ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரிதான். லாக்கப் இறப்பு சம்மந்தமாக ஒரு மாதத்தில் அறிக்கை தர உத்தரவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. துரை என்பவர் தாக்கப்பட்டது சம்மந்தமாக அறிக்கை கேட்டார்கள். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த கடிதம் நகல் என்றால் சரிதான். இந்த கடிதம் 6.9.2014 தேதியிடப்பட்டது என்றும் சொன்னால் சரிதான். அந்த கடிதம் 3வது எதிரி இன்ஸ்பெக்டர் எழுதிக்கேட்டதால் எழுதிக்கொடுத்தேன். சிபிசிஐடி போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ஜீன் 2014 முதல் 2016முடிய காலகட்டத்தில் சுமார் 20முறை சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தை லேப்டாப்பில் பதிவு செய்தார்கள். பதிவு செய்ததை என்னிடம் படித்தும் காட்டினார்கள். எனக்கு ஜீன் 2014க்கு பிறகு எந்தெந்த தேதியில் விசாரித்தார்கள் என்று நினைவில்லை. 6.9.2014 தேதிட்ட கடிதத்தை காட்டி என்னை விசாரித்தார்களா என்றால் அந்த கடிதத்தை காட்டி அவர்கள் என்னை விசாரிக்கவில்லை. 6.9.2014 தேதியிட்ட கடிதம் 3வது எதிரி சொல்லி நான் எழுதி காவல் துணை கண்காணிப்பாளருக்கு கொடுத்ததாக சிபிசிஐடி விசாரணை அதிகாரியிடம் நான் சொன்னேனா என்றால் சொன்னேன். நீதிமன்ற விசாரணை மற்றும் சிபிசிஐடி விசாரணை நடந்து வருவதாக 6.9.2014 தேதியிட்ட கடிதத்தில் சொல்லிருப்பதும் 3வது எதிரி சொல்லி எழுதப்பட்டதா என்றால் ஆமாம். காவல் துணை கண்காணிப்பாளரிடம் 6.9.2014 தேதியிட்ட கடிதம் 3வது எதிரியான இன்ஸ்பெக்டர் சொல்லி எழுதிக்கொடுத்தாக சொல்லவில்லை.8.5.2014 தேதி விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்.1 என்னை

காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். காவல்நிலையத்தில் வைத்து தான் விசாரித்து வாக்குமூலத்தை டைப் செய்தார்கள். 7.5.2014 அன்று காலை 8.00 மணிக்கு 1வது பிளாட்பாரத்தில் இருந்ததாகவும், அப்போது ஆய்வாளர் பிக்பாக்கெட் அடித்துள்ளார் என்றும் அதனை போய் பார்க்கும்படி சொன்னார் என்றும் புகார்தாரர் ஒருவர் தனது பர்ஸ் பிக்பாக்கெட் அடித்ததாக சொன்னார் என்றும், ஒரு நபரை அவர் அடையாளம் காண்பித்தார் என்றும், வாடா என்று சொன்னபோது அவன் ஓடினான் என்றும், நான் திருடன் பிடியுங்கள் என்று சத்தம் போட்டேன் என்றும், அவனை துரத்திக்கொண்டு பொதுமக்களுடன் நானும் சென்றேன் என்றும், பிளாட்பாரத்தில் இருந்த தண்டவாளத்தில் குதித்து ஓடினான் என்றும், தண்டவாளத்தில் தடிக்கி கிழே விழுந்தான் என்றும், எழுந்து திரும்ப ஓடினான் என்றும், ஒடிய எதிரியை 1வது பிளாட்பாரத்தில் பொதுமக்கள் பிடித்து அடித்து காலால் உதைத்தார்கள் என்றும் அப்போது சுமார் 20 நபர்கள் இருந்தார்கள் என்றும், பொதுமக்களை விலக்கிவிட்டு காலை 8.30மணிக்கு நான் அவரை அழைதது வந்து காவல்நிலையத்தில் ஆய்வாளரிடம் ஒப்படைத்து விட்டு நிலையத்தில் இருந்தேன் என்று அந்த வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்படி சம்பவம் நடக்கவில்லை அவ்வாறு 3வது எதிரியான இன்ஸ்பெக்டர் சொல்லவேண்டும் என்று சொன்னதால் நான் சொன்னேன். நான் நீதித்துறை நடுவரிடம் உண்மை சம்பவத்தை மறைத்து சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பே என்னை பணியிடை நீக்கம் செய்து இருந்தார்கள். நீதித்துறை நடுவரிடம் அவ்வாறு உண்மைக்கு புறம்பாக வாக்குமூலம் அளித்தது குறித்து சிபிசிஐடி விசாரணையின் போது நான் சொன்னேனா என்றால் சொன்னேன். 15.9.2015 பிறகு என்னை சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள், 2017 ஜனவரியில் நான் மீண்டும் 'நான் பணியில் சேர்ந்தேன். நான் 2015ல் சிபிசிஐடியிடம் வாக்குமூலம் கொடுத்தபின்பு தான் 2017ல் ஜனவரியில் பணியில் சேர்த்தார்கள் என்றால் சரிதான். துரை தாக்குதல் வழக்கு காரணமாக என்னை ஏன் துறை விசாரணை செய்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. 6.9.2014 தேதியிட்ட கடிதத்தில் ரயில்வேல பிளாட்பாரத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் துரை மற்றும் 'ரவி ஆகியோரை அடித்து துன்புறுத்தமாட்டேன் என்றும்

எழுதியுள்ளேன் என்றால் சரிதான். 15.9.2014 தேதிய சிபிசிஐடி விசாரணையில் லாக்கப்புக்கு வெளியே ஜெயவேலை அழைத்து வந்து 3வது எதிரி பிளாஸ்டிக் பைப்பால் ஜெயவேலின் காலில் 6 முறை அடித்தார் என்று நான் சொன்னேனா என்றால் சொன்னேன். சிபிசிஐடி விசாரணையில் 3வது எதிரியான இன்ஸ்பெக்டர் சாட்சி அசாரியாவுக்கு ஊருக்கு செல்ல எவ்வளவு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் பணம் கொடுத்ததாக சொன்னேன், எவ்வளவு என்று தற்போது நினைவில்லை. 7.5.2014 தேதி காலை 7.00மணிக்கு இன்ஸ்பெக்டர் வரசொன்னதாக எனக்கு போன் வந்ததாக சிபிசிஐடி விசாரணையில் சொல்லியுள்ளேன். காவல்நிலையத்தில் இருந்து பலமுறை எனக்கு போன் வந்ததாகவும் நான் திரும்பு தொடர்பு கொண்டு காரணம் கேட்டதாகவும் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். காலை 9.00மணிக்கு ரயில்வே காவல்நிலையம் சென்றதாக சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். 3வது எதிரியான இன்ஸ்பெக்டர் சொன்னதின்பேரில் காசி என்பவர் காவல்நிலையத்தை கழிவினார் என்று சித்ரா சொன்னதாக சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். 7.5.2014ந் தேதி காலை 9.45மணிக்கு விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். அங்கு யாரும் இல்லை என்றும் இன்ஸ்பெக்டரின் சுமோ கார் இல்லை என்றும் போன் செய்து கேட்டபோது ரயில்வே குட்ஸ்யார்டு வரசொன்னார்கள் என்றும் அங்கு நான் சென்றேன் என்று சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். அங்கு டாடாசுமோவில் ஜெயவேல் தூங்கியதுபோல் இருந்தார் என்றும் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். ஜெயவேல் எனக்கு பழக்கமானவர் என்பதால் நான் அவரிடம் பேச சுமோவின் பின்பக்க கதவை திறக்க சென்றேன் என்றும் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். அப்போது இன்ஸ்பெக்டர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு போ என்று என்னை அனுப்பி வைத்தார் என்றும் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு நான் சென்றேன் என்றும் பின்னர் இன்ஸ்பெக்டர் ஜெயவேலை அங்கு அழைத்து வந்தார் என்றும், ஜெயவேல் இறந்துவிட்டார் என்றும் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். 3வது எதிரியான இன்ஸ்பெக்டர் மருத்துவரியிடம் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார் என்றும் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். ஜெயவேல்

இறந்தது தெரிந்த பின்பு நான் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு வந்ததாக சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். லாக்கப் டெத் தொடர்பாக ஏடிஎஸ்பி விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. நான் சொன்னதுபோல் முதல்விசாரணையில் 8.5.2014 அன்று நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். 9.5.2014 அன்று காலை 7.00மணிக்கு ரயில் காவல்நிலையம் வரவேண்டும் என்று புருஷோத்தமன் 8.5.2014 இரவு போனில் சொன்னதாக நான் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேனா என்று நினைவில்லை. 9.5.2014ந்தேதி காலையில் நான் காவல்நிலையம் சென்றதாக சிபிசிஐடி விசாரணையில் சொன்னேனா என்று நினைவில்லை. 9.5.2014 அன்று காவல்நிலையம் சென்ற போது அங்கு உயர் அதிகாரிகள் வருவார்கள் என்றும், நீதிபதி வருவார்கள் என்றும், எல்லோரும் ஒரே மாதிரியான பதில் சொல்லவேண்டும் என்றும் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்., அந்த நிகழ்வு நடந்தது 8.5.2014. இன்ஸ்பெக்டர் சொன்னதின்பேரில் தான் 6ந்தேதி நடந்த சம்பவத்தை 7ந்தேதி நடந்ததாக சொன்னதாக சிபிசிஐடி விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க ஒவ்வொரு காவலநிலையதிலும் எஸ்பி ஏட்டு ஒருவர் இருப்பார் என்றால் சரிதான். இன்றுவரை எஸ்பி ஏட்டாக ரவி என்பவர் இருக்கிறார். காவல்நிலையத்தில் அசம்பாவிதம் நடந்தால் அவர் மேல் அதிகாரிகளுக்கு தெரிவிப்பார் என்றும் எஸ்பி ஏட்டு காவல் ஆய்வாளரின் கட்டுப்பாட்டில் இல்லை என்றும் சொன்னால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திற்கு அருகில் பிள்ளையார் கோவில் உள்ளது என்றும், அதன் அருகில் ஆர்எம்எஸ் போஸ்ட்ஆபிஸ் உள்ளது என்றால் சரிதான். ஆட்டோ ஸ்டாண்டு, கார் ஸ்டாண்டு உள்ளது என்றால் சரிதான். காவல்நிலையம் அருகில் ஜனம் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். ஏற்கனவே என்னை தற்காலிக பணி நீக்கம் செய்து வைத்திருந்தார்கள் என்றும் இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக சம்பவத்தை பார்த்தது போல் பொய்யான வாக்குமூலம் அளித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் மேல் அதிகாரிகள் சொன்னதின்பேரில் தான் அந்த வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு 15.9.2015ந்தேதியிட்ட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், உண்மையில் அந்த தேதியில் என்னிடம் வாக்குமூலம் பெறவில்லை

என்றும் 2016 ஜனவரியில் தான் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், அதன்பிறகு எனக்கு பணி வழங்கினார் என்று சொன்னால் சரியல்ல. திரும்பவும் மாற்றி சாட்சியம் அளித்தால், வேலைக்கு பாதகம் ஏற்படும் என்று பொய்யாக 3வது எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக மனுவின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**